# பத்திரிக்கை செய்தி

## ரேசன் அட்டை வழங்க ரூ.3,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய வட்ட வழங்கல் அலுவலர் கைது

புகார்தாரர் திரு.அருண்குமார், தேவிகாபுரம், சேத்பட் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் ரேசன் அட்டை வேண்டி கடந்த 03.09.2024 ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்துள்ளார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திருமதி.சுமதி, வட்ட வழங்கல் அலுவலர், சேத்பட் தாலுக்கா, அவர்கள் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவண்ணாமலை மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் நேற்று 07.01.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.சுமதி, வட்ட வழங்கல் அலுவலர், லஞ்ச பணம் ரூ.3,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.